தான் இப்படி சாங்க்சுவரி அகலமாக இருக்கிறது. "ஸூ" என்று பல யிடங்களில் வைத்திருக்கிறார்கள். அதுகூட இந்த அளவிற்கு இல்லை, சில மாகாணங்களில் இல்லை. எனவே, அவ்வளவு விரிவான இடத்தில் 20 ஏக்கர், பொதுக் காரியத்திற்காகக் கொடுப்பதைப் பெரிய குறை என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த மான்கள் உலாவிற்காக ஒதுக்கப்பட்ட அந்தக் காட்டுப்பகுதி தனியாக இருக்கிறது. கல்லூரிக்கு ஒதுக்கப்பட்ட பகுதி காட்டுப் பகுதி என்றயிடத்தில் ஒதுக்கப்பட்ட தேயல்லாமல், டீர் சாங்க்சுவரி என்ற வட்டம் அமைத்து அதற்குள்ளே 20 ஏக்கர் ஒதுக்கப்படவில்லை. காட்டுப்பகுதி, என்ற ஃபாரஸ்ட் பகுதியில் 20 ஏக்கரை, காட்டு இலாக்காவினரும், மற்றவர்களும் தேர்ந்தெடுத்து, குருநானக் கல்லூரிக்காகக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். பஞ்சாபிகள் சேர்ந்திருக்கும் சங்கத்தினர், ஒரு கல்லூரி அமைக்க முயற்சியெடுத்து ஏராளமான பொருள் திரட்டும் பணியில் ஈடுபடுகிறார்கள். கல்லூரிக்காக இடம் மட்டும் தரும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. பல இடங்களில், புறம்போக்குக் காட்டு நிலத்தைக் கல்லூரிகளுக்கு வழங்குவதை முறையாகக் கொண்டிருக்கிறோம். குருநானக் 500-வது பிறந்த நாள் ஆண்டு விழாவினைபொட்டி, 5 இலட்சம் ரூபாயில் கட்டடம் கட்டும் முறையில் அவர்கள் 3 இலட்சம் ரூபாய் திரட்டி வருகிறார்கள். இந்திய அரசு ஒரு இலட்சம் தருகிறேன் என்று சொல்லியது. மாநில அரசும் தந்து, அந்த மண்டபம் வரத்தக்க அளவில், கவர்னர் அவர்களின் ஆலோசனையின்பேரில் காட்டிலாக்கா அவர்களையும் கலந்துகொண்டு, மான் உலாவிற்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத அளவிற்குத் தந்திருக்கிறது.

(6) அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் இயங்கும் அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையை இப்பேரவை தெரிவிக்கிறது".

THIRU R. POONAPPA NADAR : Sir, I second it.

(7) அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"குறிப்பாக அரசின் போலீஸ் அடக்குமுறைக் கொள்கையை இப்பேரவை கண்டிப்பதோடு, அரசின் கொள்கையை ஏற்க மறுக்கிறது".

திரு. வி. கே. கோதண்டராமன் : அதை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு முன்பு, இந்தப் பேரவையிலேயிருக்கும் உறுப்பினர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். நம்பிக்கையில்லை என்று தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசும் மாண்புமிகு உறுப்பினர்களும்,